# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

Calendar Case No: CC.1/2024

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.1 (LW 1)

Name : வசந்தகுமார்

Father's/Husband Name: எம்.ஜி.ஆர்

Village : பசும்பலூர்

Taluk : வேப்பந்தட்டை

Age : 24/2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.08.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் A1–கலைவாணன், A2–மகேந்திரன் , A3–குபேந்திரன் , A4–கோவிந்தராஜ் , A5–கலையரசன், A7– சுதா ஆஜர். A6–மேனகா காந்தி ஆஜர் இல்லை)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். நான் கேட்டரிங் படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி வாக்குமூலத்தை நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வி.களத்தூர் போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தற்போது தேதி, வருடம் ஞாபகம் இல்லை. அன்று மாலை சுமார் 06.45 to 07.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்து எங்கள் ஊர் நடுத்தெருவில் ஆஜர் எதிரிகளின் வீட்டின் வழியே நடந்து சென்றுகொண்டிருந்தேன். ஆஜர் எதிரிகளின் வீட்டருகே தண்ணீர் பிடித்து கொண்டிருந்தார்கள். நான் நடந்து செல்லும்போது என்னை பார்த்து அங்கிருந்த பெண்மணி ஒருவர் என்னிடம் நீ யார் பா என்ன ஊர் என கேட்டார்கள். நான் யாராக இருந்தால் என்ன ரோட்டில் நடந்து செல்கிறேன் என பதில் சொன்னேன்.

ii) ஆஜர் எதிரி கலைவாணன் எங்க தெருவுக்கு வந்து என்னடா பேசுற என என்னை சட்டையை பிடித்து கையால் கண்ணத்தில் தாக்கினார். நானும் திருப்பி தாக்கினேன். அங்கிருந்த ஆஜர் எதிரிகள் மகேந்திரன், குபேந்திரன் அவர்களது மனைவிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் ஊதா நிற சேலை அணிந்திருக்கும் நபரும்(ஆஜர் எதிரி சுதாவை சாட்சி அடையாளம் காட்டுகிறார்) மற்றொரு பெண்மணி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. கலையரசன் மற்றும் அவரது சகோதரர் மற்றும் கலையரசனின் தந்தை,(ஆஜர் எதிரி கோவிந்தராஜை சாட்சி அடையாளம் காட்டுகிறார்) தேவடியா பயலே என திட்டி சட்டையை பிடித்து தாக்கினார்கள். சம்பவத்தின் போது ஆஜர் எதிரி மகேந்திரன் கத்தியாலும், குபேந்திரன் கட்டையாலும் தாக்கினார்கள். அதில் எனக்கு தலையிலும், இடது காது ஓரமும், எனது வலது மற்றும் இடது தோள்பட்டையிலும் இரத்த காயம் ஏற்பட்டது (சாட்சி தானாக இடது காதின் அருகே ஏற்பட்ட காயத்தினை காட்டுகிறார்). தொடர்ந்து காயம் அடைந்த நான் அங்கிருந்து எனது வீட்டருகே சென்று எனது அண்ணன் ரமேஷ் குமாரிடம் தகவல் சொன்னேன். காயம் அடைந்த என்னை இருசக்கர வாகனத்தில் வி.களததூர் ஆரம்பு சுகாதார நிலையத்திற்கு சென்னே். அங்கிருந்து மேல்சிகிக்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு மருத்துமனைக்கு கொண்டு சேர்க்கப்பட்டேன். அங்கு நான் சிகிக்சை எடுத்துக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி வாக்குமூலத்தை நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வி.களத்தூர் போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன். அந்த புகார் வாக்குமூலம் (அது **அ.சா.ஆ.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) புகாரை நான் தான் கைப்பட எழுதிகொடுத்தேன் என்றால் சரியல்ல, போலிசார் எழுதிக்கொண்டார்கள். ஆஜர் எதிரிகளும் நானும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பெரம்பலூர் கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் குற்ற எண்.138/2023 புகார்தாரர் மற்றும் அவரது சகோதரர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வைத்து தான் என்னை போலிசார் விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால்

சரிதான். முதல் விசாரணையில் சொல்லிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் எந்த ஆயுதங்களும் கைபற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் 2ம் எதிரி மகேந்திரன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 300மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். உங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருக்கின்ற காரணத்தினால் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எங்கள் இருவருக்கும் முன்விரோதம் இல்லை. 1ம் எதிரி கலைவாணன் புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ என்னை எந்த இடத்தில் உடம்பில் எந்த பகுதியில் அடித்தார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் பழிவாங்கும் எண்ணத்தில் எனக்கு நானே காயம் ஏற்படுத்திக்கொண்டு பொய் புகார் கொடுதுள்ளேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகள் அனைவரும் என்னை அடிக்கவில்லை என்றாலும் 6ம் எதிரி மேனகா காந்தி வீட்டின் முன்பு நின்று கொண்டு கெட்ட வார்த்தையால் பேசியும் மானபங்கப்படுத்தும் கெட்ட எண்ணத்திலும் வீண் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

Calendar Case No: CC.1/2024

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.2 (LW 3)

Name : துரைக்கண்ணு

Father's/Husband Name: ஆறுமுகம்

Village : பசும்பலூர்

Taluk : வேப்பந்தட்டை

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.08.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் A1–கலைவாணன், A2–மகேந்திரன் , A3–குபேந்திரன் , A4–கோவிந்தராஜ் , A5–கலையரசன், A7– சுதா ஆஜர். A6–மேனகா காந்தி ஆஜர் இல்லை)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1–வசந்தகுமார் எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், அவர்களும் எனது உறவினர்கள். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தற்போது தேதி, வருடம் ஞாபகம் இல்லை. அன்று மாலை சுமார் 06.45 to 07.00 மணியளவில் வசந்தகுமார் குபேந்திரன் வீட்டருகே நடந்து சென்றுகொண்டிருந்த போது எதிரிகள் மகேந்திரன், குபேந்திரன் ஆகியோர் உள்ளிட்ட ஆஜர் எதிரிகள் வசந்தகுமாரை பிடித்து அடித்து கத்தியால் குத்திவிட்டதாக கேள்விபட்டேன். மேற்படி தாக்குதலில் வசந்தகுமாருக்கு முதுகு மற்றும் காது அருகே ரத்தம் காயம் ஏற்பட்டிருந்தது. இதுதொடர்பாக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(i) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.1/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 (LW5 ) |
| Name : | ராஜா |
| Father's/Husband Name: | கலியன் |
| Village : | பசும்பலூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 40 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.08.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் A1–கலைவாணன், A2–மகேந்திரன் , A3–குபேந்திரன் , A4–கோவிந்தராஜ் , A5–கலையரசன், A7– சுதா ஆஜர். A6–மேனகா காந்தி ஆஜர் இல்லை)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் M.A படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, தேதி, வருடம் ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது போலிசார் என்னிடம் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் (அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் சம்பவ இடத்தில் வந்து போலிசார் விசாரித்து

என்னிடம் கையெழுத்து வாங்கியதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வசந்தகுமாருக்கு ஏற்பட்ட தகராறு தொடர்பாக பசும்பலூரில் உள்ள தகராறு நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்தார்களா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் நான் வெற்று தாளில் கையொப்பம் செய்தேன். பொதுவாக வெள்ளை தாளில் யாரும் கையொப்பம் செய்யமாட்டார்கள் என்றால் சரிதான். முதுநிலை பட்டப்படிப்பு நான் வெள்ளை தாளில் கையொப்பம் செய்ததாக கூறுவது நம்பும்படியாக என்று சொல்வது சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் கடந்த 04.07.2023 அன்று காலை 09.30 மணியளவில் வி.களத்தூர் போலிசார் குபேந்திரன் வீட்டருகே வந்து தகராறு தொடர்பாக விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் போலிசார் தயார் செய்த பார்வை மஜரில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.